# PROBLEMS FACED BY FAMILIES WITH CARDBOARD: CENTERED STUDY OF THE THETHAPALAI VILLAGE

**L.MONIKA LUXMI**

Department of political science, Faculty of Arts & Culture
South Eastern University Of Sri Lanka.

Monikalaxmi34@gmail.com

**Abstract**

In many communities, card games are seen as bad habit and to be avoided. Card games are also seen as a costly game. Often one half of one's income is swallowed up and he is subjected to defaulted loans. Most consider the status a to be an acceptable research activity and not just their profession. The impact is causing serious problems in families. Male and female are seen as one of the activities of daily life. The impact of this has been found in Sri Lanka. But the study shows that the male and female in the village Of Thethapalai, where many species live participate in the game. In this respect, Do all the participate man and woman in the village of Thethapalai? What are the problems faced by families with card game? What consequences are the children facing? It is the main and auxiliary basis for what measures should be taken to protect families. Out of 350 families living in the village of the Thethapalai, 150 families were selected and out of them 70 members selected 100 members based on direct observation, interview and discussion. According to the results, a large number of man are the engaged in cardamom in the village of Thethapolai and woman are engaged in the business of giving money or interest to the cardholders. According to the results of the analysis of the data obtained in this case divorce, debt, theft, suicide, children are psychotically vulnerable. Issues such as the destructions of property and exclusion in the community have been identified. It has been found that various factors influence their recession even though many measures are taken to minimize the impact of it on families and their impacts. It is three fore recommended to identify ways to protect families from problems caused by playing cards. The experience of the analyst is that it can provide advice to minimize with cardboard.

**Keywords;** Cardboard, Family, Loan, Money, Problem,

## 1. ஆய்வின் அறிமுகம்

நல்லொழுக்கங்களை போதிக்கின்ற பல அற நூல்களில் சூதாட்டம் ஒரு தீய பழக்கமாக சொல்லப்படுகின்றது. அத்துடன் இன்றைய காலத்திலே எத்தனையோ பழைமையான விடயங்கள் மறைந்து கொண்டு போனாலும் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த சூதாட்ட பந்தய விளையாட்டு மட்டும் மறைந்து போகவில்லை.குதிரை பந்தயம், சீட்டாட்டம், தாயம், கோழிச்சண்டை என சூதாட்டத்தில் பல வகைகள் காணப்படுகின்றன. சீட்டாட்டம் வழமையான சீட்டுக்களையோ தனிப்பட்ட சீட்டுக்களையோ கொண்டு விளையாடப்படும் ஆட்டம் ஆகும். வழமையான சீட்டுக்களைக் கொண்டு விளையாடப்படும் ஆட்டங்களுக்கு சீர்திருத்தப்பட்ட விதிமுறைகள் உள்ளன. இருப்பினும் பல வகை சீடாட்டங்கள் இனம், பண்பாடு, நாடு, நிலப்பகுதி, குழுக்கள் என்பதைப் பொறுத்து வெவ்வேறான விதிமுறைகளுடன் விளையாடப்படுகின்றன. சீட்டாட்டம் என வகைப்படுத்தப்படாத பல ஆட்டங்களில் சீட்டுக்கள் பயன்படுத்தபடுவதும் உண்டு. அதேபோல சீடாட்டமாக கருதப்படும் சில ஆட்டங்களில் அட்டையும் பயன்படுத்தப்படுகிறது. முதன்மையான வரையறையாக சீட்டாட்டத்தில் ஆடுபவர்கள் சீட்டுக்களைப் பயன்படுத்துவதே ஆகும். ரம்மி, 304 சீட்டு ஆட்டம், பிரிட்ஜ், கழுதை ஆட்டம், மங்காத்தா அல்லது மூணு சீட்டு, பேக்கர், 28, சாலிடைர், பிரிசெல் போன்றன பொதுவாக பரவலான சீட்டாங்களாக காணப்படுகின்றன.

இலங்கை பொறுத்தவரையில் சூதாட்டம் காணப்படுகின்றது. அதில் ஒரு வகையான சீட்டாத்தை பெரும்பாலான பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது. சீட்டாத்தை தவிர்ப்பதற்கான சட்டங்கள், சிவில் சமூக நடவடிக்கைகள் என்பன கொண்டுவரப்பட்டாலும், இன்றுவரை ஒழிக்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கை ஒரு சூதாட்ட தீவாக மாறி வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் சீட்டாட்டம், தாயம் போடுதல் என்பன முதன்மை பெறுகின்றன. சீட்டாட்டமானது இலங்கை தமிழர்களிடையே பிரபல்யமான ஒன்றாக காணப்பட்டது. இவ்விளையாட்டானது கொண்டாட்டங்களில், ஒன்று கூடல்களில், நண்பர்களிடையே வெறுமனே ஓர் விளையாட்டாக ஆரம்பத்தில் பார்க்கப்பட்டன. ஆனால் அது தற்காலங்களில் பெறுமதியான ஏதாவது ஒரு பொருளை வைத்து விளையாடும் ஆட்டமாக மாறிக்கொண்டு வருகின்றன. இதனால் சமூகத்தில், குடும்பத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சீட்டாட்டத்தை பல கிராம புறங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இந்த பின்புலத்தில் புத்தளம் மாவட்ட கல்பிற்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேத்தாப்பளை கிராமத்தில் சீட்டாட்டத்தால் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கவனத்தில் கொள்கின்றன.

கற்பிற்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதாக தேத்தாப்பளைக்கிராமம் காணப்படுகின்றது. இக்கிராமமானது அபிவிருத்தியில் பின்தங்கிய ஓர் கிராமமாக காணப்படுகின்றது. இக்கிராம அபிவிருத்தியை பாதிக்கின்ற காரணிகளில் சீடாட்டம் காணப்படுகின்றன. இச்சீட்டாட்டமானது ஆண் பெண் வித்தியாசமின்றி திருமணமான மற்றும் திருமணமாகாத ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் இதில் பங்கு கொள்ளுகின்றனர். தேத்தாப்பளை கிராமத்தில் 350 குடும்பங்கள் அதாவது மொத்த அங்கத்தவர் 2521 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இதில் 100 குடும்பங்களுக்கு மேற்பட்டவர்கள் இச்சீட்டாட்டத்தில் பங்கு கொள்கின்றனர். இதனால் குடும்பங்களில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதன் தாக்கம் சமூகத்தில் பல பிரச்சினைகளை கொண்டு வருகின்றன. இதனை தடை செய்வதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை முற்றாக ஒழிக்க முடியவில்லை. இதனால் குடும்பங்களில் பல பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமே காணப்படுகின்றன. இந்த வகையில் தேத்தாப்பளை கிராமத்தில் சீட்டாட்டத்தால் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அதற்கான காரணங்களையும் ஆராய்வதாகவே இவ் ஆய்வுகட்டுரை அமைகின்றது.

## 2. ஆய்வு பிரச்சினை

உறுதியாய் ஸ்தாபிக்கப்பட்ட குடும்பங்கள் சரித்திரம் முழுவதும் பலமான சமுதாயங்களை உருவாக்குவதற்கு உதவியாயிருக்கின்றன. இவ்வாறு உறுதியாக, குடும்பங்கள் உருவாக்கப்பட்டாலும் சீட்டாட்டத்தினை போதையாக வைத்திருப்பதனால் குடும்பங்கள் சிதறிச் செல்வதில் இக்காரணமும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதனால் குடும்பங்களில் விவாகரத்து, களவு, கடன் தொல்லை, சண்டைகள், தற்கொலை, பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைதல் மற்றும் மன உளைச்சல் போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு குடும்பங்கள் தள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது தேத்தாப்பளை கிராமத்தில் சீட்டு ஆடுவதனால் என்ன என்ன பிரச்சினைகள் குடும்பங்களில் ஏற்படுகின்றது எனபதை மதிப்பிடுவதே இவ்வாய்வு பிரச்சினையாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

1. சீட்டு ஆட்டம் தொடர்பான எண்ணக்கருவை இனங்காணல்
2. சீட்டு ஆட்டத்தால் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறிதல்
3. அவ்வாறு பங்குபற்றும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்
4. சீட்டு ஆட்டத்தில் ஆண் மற்றும் பெண் இருபாலரின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது
5. அதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

## 4. இலக்கிய மீளாய்வு

Charles and Thomas என்போர் எழுதிய 'The gambling scane:why people gamble' ஆய்வுக்கட்டுரையில் சூதாட்ட நடவடிக்கைகள் எங்கு நடைபெறுகின்றது, மக்கள் ஏன் சூதாடுகின்றனர் அதனால் அவர்களுக்கு கிடைக்கும் அனுபவம் தொடர்பாக குறிப்படப்பட்டுள்ளன.

Winters, Bengston and Door என்போர் எழுதிய 'Prevalence and risk factors of problem gambling among college students' என்ற ஆய்வுக் கட்டுரையில் ஆரம்பத்தில் 87 வீதமானோர் ஆரம்பத்தில் ஒரு மறையாவது ஸதாட்டத்தில் பங்கேற்றனர், இதனால் நிதி, சமூக அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், இது மனிதனுக்கு காணப்படுகின்ற நோய் போன்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Helan Suurvali, Hodgins and Cunningham என்போர் எழுதிய Motivators for resolving or seeking help for gamgling problems: A review of the empirical litearature' என்ற ஆய்வுக்கட்டுரையில் சூதாட்ட பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது நிறுத்த அல்லது குறைக்க போன்ற வழிகள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளது.

Pentland and Drosten என்போர் எழுதிய ' Finacicial counseling and problem gambling counseling : exploration of service model' என்ற ஆய்வுக்கட்டுரையில் சூதாட்டக்காரர்கள் எவ்வாறு நிதியினை கையாளுகின்றனர் தொடர்பான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

Dowling. என்பவர் எழுதிய 'The impact of gamgling problems on families' என்ற ஆய்வுக்கட்டுரையில் சூதாடுவதால் குடும்பங்களில் நிதி கஸ்டங்கள், சமூக பாதிப்புக்கள் மற்றும் சட்ட சிக்கல்கள் ஏற்படுவதாகவும் குடும்ப அங்கத்தவர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி விடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

Dickson, Derevensky and Gupta என்போர் எழுதிய ' Youth gambiling problems: Examining risk and protective factors' என்ற ஆய்வுக்கட்டுரையில் இளைஞர்களுக்கு சூதாடுவதால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றியே முன்வைக்கப்பட்டுள்ளது.

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு பண்பு ரீதியானது. இது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாகும். இக்கிராமத்தில் வாழ்கின்ற சீட்டாட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களிடத்தில் கள ஆய்வு மேற்கொண்டு நேர்காணல், கலந்துரையாடல் மற்றும் கண்காணிப்பு மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

1. முதன்நிலைத்தரவு.

நேர்காணல், கலந்துரையாடல், அவதானிப்பு

சுமார் 150 குடும்பங்களை இனங்கண்டு அதில் மாதிரியாக 70 குடும்பங்களை சேர்ந்த மொத்தம் 100 பேர் இவ்வாய்க்கு உட்படுத்தப்பட்டனர். 40 குடும்பங்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 35 குடும்ப பெண்களிடமும் 5 ஆண்களிடமும் ஆழ்ந்த நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக கிராம உத்தியோகத்தர், இளைஞர்கள், முதியவர்கள், கல்விமான்கள் போன்றோருடன் குழு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன.

2. இரண்டாம் நிலைத்தரவுகள்

ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தள கட்டுரைகள், பத்திரிகைகள் போன்றவற்றில் பிரசுரிக்கப்பட்ட இது தொடர்பான கட்டுரைகள் வாசிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

## 6. தரவு பகுப்பாய்வு

தேத்தாப்பளை கிராமத்தை மையப்படுத்திய ஆய்வானது சீட்டாட்டத்தால் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறிதலாகும். இதன்படி இக்கிராமத்தில் வாழ்கின்ற பாதிக்கப்பட்ட குடும்ப பெண்கள் மற்றும் ஆண்கள், இளைஞர்கள், கிராம உத்தியோகத்தர் மற்றும் முதியவர்களிடத்தில் கள ஆய்வு மேற்கொண்டு நேர்காணல், கலந்துரையாடல் மற்றும் கண்காணிப்பு மூலம் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

அங்குள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய மக்களிடம் சீட்டாட்டத்தால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி வினவிய போது பின்வரும் பெறுபெறுகள் கிடைக்கப்பெற்றது.

ஆய்வு பிரதேச குடும்பங்களில் சீட்டாட்டம் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. குடும்ப வறுமை, கணவன் மனைவி இடையிலான சண்டை, பிள்ளைகளின் கல்வி நிலை, விவகரத்து, சொந்த வீட்டில் கொள்ளையடித்தல், வீட்டு பொருட்கள் மற்றும் நகைகளை விற்றல், தற்கொலை, கடன்தொல்லை, பொலிசாரல் கைது செய்யப்படல், சண்டை போடல், களவு எடுத்தல் போன்ற பாரதூரமான பிரச்சினைகளை அவதானிக்க கூடியதாக இருந்தது. குடும்ப தலைவன் என்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சமாகும். ஒவ்வொரு குடும்பங்களின் தேவைகள் குடும்ப தலைவனின் உழைப்பில் தங்கியுள்ளது. அவ்வாறு தெரிந்தும் சீட்டாட்டத்தால் ஜெயித்தால் காசு பல மடங்கு கிடைக்கும் என்ற பேராசை சீட்டாட்டத்திலுள்ள ஆர்வத்தை அதிகரிக்கின்றது. ஒரு தடவை சீட்டாட்டத்தில் வெற்றி பெற்று தமது கடின உழைப்பினால் கிடைக்கும் ஒரு மாத சம்பளம் ஒரு விளையாட்டில் கிடைக்கின்றது என்ற மனநிலை, அதன் முதல் தடவை வெற்றி திரும்ப திரும்ப விளையாட செய்யும் மனநிலை என்பதை நேர்காணலினபோது பாதிக்கப்பட்டவர் ஊடாக அறிய முடிந்தது. மேலும் தனது குடும்பம் பிள்ளையை விட்டு தனிமையாக வாழ்வதற்கு காரணம் சீட்டாட்டம் என்று குறிப்பிட்டார். அவர் ஒரு நாளைக்கு 1000 சம்பளம் வாங்குபவர் அவர் கிழமைக்கு ஒரு தடவை சீட்டாட்டம் விளையாடுவதாகவும், ஆரம்பத்தில் அதிக பணம் சம்பாதித்தேன் பிறகு படிப்படியாக தோல்வியடைந்தேன். சம்பள பணத்தை வீட்டுக்கு கொடுக்காமல் முழுவதையும் சீட்டாட பயன்படுத்தினேன், தொடர்ந்து ஏற்பட்ட தோல்வியால் வேலைக்கு போவதை நிறுத்தினேன். இவ்விளையாட்டில் பைத்தியமானேன் என்று குறிப்பிட்டார்.

மற்றுமொரு நேர்காணலில் (இலக்கம் 4) கணவன் திருமணத்திற்கு முன்பே சீட்டாட்டத்தில் ஆர்வமுள்ளவர் என்றும், சம்பாதிப்பதற்கு வேலை செய்வதற்கு செல்வதை விட சீட்டாட்டத்தால் வரும் பணத்தையே வீட்டு தேவைக்கு செலவு செய்வதாகவும், இதில் வெற்றி பெற்றால் மட்டுமே வீட்டில் அடுப்பு பற்றும் என்றும் குறிப்பிட்டார். அத்தோடு தனது பிள்ளைகளின் பாடசாலை தேவைகள் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு தான் கூலி வேலைக்கு செல்வதாக குறிப்பிட்டார். இப்பழக்கத்தை அவரால் விட முடியாது என்றும் குறிப்பிட்டார்.

சீட்டாட்டம் தனது கணவனுக்கு அவரது புது நண்பரின் உறவால் ஏற்பட்டது. இதனை மறைப்பதற்கு பல பொய்கள் கூறுவார். இருந்தாலும் நான் அதை தெரிந்து கொண்ட பிறகு வீட்டில் அனேகமான பிரச்சினைகள் ஏற்பட்டது. எங்களுக்கிடையே சண்டைகள் அடிக்கடி வரும். வீட்டுக்கு வரவே மாட்டார். அதனோடு குடி பழக்கத்தையும் பழகிக் கொண்டார். ஒரு நாள் இரத்தத்தோடு வீடு வந்தார். காரணம் கேட்ட போது சீட்டாத்தின் போது வாய் தகராறு காரணமாக அடித்துக்கொண்டதாக கூறினார். இவ்வாறு நடந்தும் அப்பழக்கத்தை இன்னும் கைவிடவில்லை என்று மிகவும் கவலையுடன் நேர்காணலின்போது தெரிவித்தார்.

மற்றுமோர் நேர்காணலின் (நேர்காணல் 5) போது சீட்டாத்தினால் தனது கணவன் இறந்து விட்டார் என்று வருத்த்ததுடன் தெரிவித்தார். திருமணமாகி 30 வருடம் ஆகின்றது. திருமணமாக முன்னரே சீட்டாட்டம் பழக்க இருந்தது. திருமணமானபின் என்னிடம் வேலைக்கு செல்வதாக பொய் காரணம் கூறி சீட்டாட செல்வார்.இதனால் ஊரை சுற்றி நிறைய கடன் வாங்கி விளையாடுவார். என்னிடம் அவர் உறவினரிடம் நகை, வாகனங்களை வாங்கி சென்று ஈட்டு வைத்து அதில் பெறும் பணத்தில் விளையாடுவார். தொடர்ந்தும் சில நாட்கள் சோகமாக இருந்தார். காரணம் கேட்டும் போது ஒன்றுமில்லை என்று மழப்புவார். பிறகு விஷம் குடித்துவிட்டார். அவர் நண்பரிடம் கேட்ட போது சீட்டாட்டத்தினால் தொடர்ந்தும் தோல்வி இதனால் ஈட்டு வைத்த நகைகள், வாகனங்களை மீளப் பெறமுடியாததால் மனதளவில் கவலை அடைந்தார் என்று நண்பரின் வாயிலாக அறிய முடிந்தது என்று கண்ணீரோடு குறிப்பிட்டார்.

இன்னுமொரு நேர்காணலின்( நேர்காணல் 6) போது தனது ஆண் பிள்ளைகள் இருவருமே சீட்டாட்டத்தை ஒரு பொழுது போக்காக மேற்கொள்கின்றார்கள். வீட்டுத்தேவைகளை நிறைவேற்றுவார்கள் அத்தோடு அதிலும் ஆர்வம் காட்டுகின்றார்கள். பழகிட்டாங்க நான் ஆரம்பத்தில் இருந்தே அறிவுரை சொல்வேன் ஆனால் அதை கேட்கமாட்டார்கள். அதிக பணம் வெற்றி பெற்றதும் முகத்தில் இன்பத்தையும், தோல்வி அடைந்தால் வீட்டில் அதிகமான கோபத்தையும் காட்டக்கூடியவர்களாக க இருக்கின்றர் எனக் குறிப்பிட்டார். அனேகமான இளைஞர்கள் தனது பொழுது போக்கிற்காக வியைாடுவதாக இவ் ஆய்வுப்பிரதேச நேர்காணலின் ஊடாக அறிய முடிந்தது.

மற்றுமொரு நேர்கானலின் போது(நேர்காணல் 7) அப்பா மகன் இருவருமே சீட்டாட செல்வதாகவும், பணம் இல்லாதபட்சத்தில், தனது மகள்களின் நகைகளை விற்று பகுதி காசினை தந்து மற்ற பகுதிக்கு சீட்டு ஆட செல்வதாக குறிப்பிட்டார். மற்றுமொரு குடும்பத்தில் தனது மகளின் திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை சீட்டாடியே முடித்தாகவும் இதனால் மனைவியை விவாகரத்து பண்ணிவிட்டு தனது பிள்ளைகளை விட்டு தனியாக வந்தாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தான் சம்பாதிக்கின்ற பணத்தில் குடி மற்றும் சீட்டாட்டம் மேற்கொள்வதாகவும், பணம் இல்லாதபட்சத்தில் வீட்டில் சண்டையிட்டு தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் அடிப்பதாகவும் மிக கொடுரமான முறையில் வீட்டில் நடந்துகொள்வதாகவும் இதனால் பிள்ளைகள் அப்பா வாரார் என்றார் பயந்து நடுங்கிக்கொண்டுருப்பார்கள் என்றும் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

சீட்டாத்தில் ஈடுபடுகின்றவர்களின் உறவினர்களிடம் விசாரித்த போது எந்தவிதமான வேலைக்கும் செல்வதை இல்லை என்றும், கலியாணம் முடித்து வைத்தால் திருந்துவான் என்று முடித்தவளுக்கு துரோகம் செய்துவிட்டேன் என்றும், திருமணம் முடித்த பிறகும் வேலைக்கு செல்லாமல் மனைவியின் உடைமைகளை விற்று அப்பணத்தில் சீட்டாடுகிறான்.

மற்றுமொரு குடும்பத்தில் நேர்காணலின் போது( நேர்காணல் 8) தனது கணவன் திருமணத்திற்கு முன்பு இருந்தே சீட்டாடுவதாகவும், வீட்டில் இருக்கும் ஒவ்வொரு பொருட்களையும் விற்று சீட்டு ஆடுவதாகவும், இறுதியில் வீட்டு பத்திரத்தை வைத்து நாங்கள் சொந்த இடம் இன்றி தெருக்கு வந்ததாகவும்,பிறகு பிள்ளைகளை எனது அம்மாவிடம் விட்டு வெளிநாட்டிற்கு பணிப்பெண்ணாக வேலைக்கு சென்றேன். கணவனால் ஈட்டு வைத்த அனைத்தையும் தாம் மீட்டுக்கொண்டதாகவும் பிறகு இரண்டு வருடங்கள் கழிந்து நாட்டுக்கு வந்ததாகவும் இதனால் பிள்ளைகள் பெற்றோர்களின் அரவணைப்பு இன்றி பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகினர் என்றும், தனது கணவன் இன்னும் அப்பழக்கத்தை விடவில்லை என்றும் அவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

ஆய்வு பிரதேசத்தில் பல விடயங்கள் அவதானிக்க கூடியதாக இருந்தது. சீட்டாட்டமானது குறிப்பிட்ட சில இடங்களிலே இடம் பெறுகின்றது. அதாவது சில மறைவான பகுதிகளில் இடம்பெறுகின்றது. மரங்களின் கீழ், குழிகளுள், மேல் மாடிகளில் மற்றும் காட்டு பகுதிகளில் இடம் பெறுவதைக் அவதானிக்க கூடியதாக இருந்ததது. ஆய்வு பிரதேச நபர்கள் மட்டுமன்றி வெளி ஊர்களில் இருந்தும் வருவதாகவும் அவதானிக்கப்பட்டது. அவர்கள் கார், வேன் மற்றும் லொறி போன்ற பெரிய வாகனங்களில் வருவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. திருமணமானவர்கள், திருமணமாகாத ஆண்கள், இளைஞர்கள் சீட்டாட வருவதையும், சில நபர்கள் வரும் போது வாகனத்தில் செல்வதையும் சில நேரம் அவ்வாகனமின்றி திரும்பி செல்வதையும் இதற்கு காரணம் அவ்வாகனத்தை ஈட்டு வைத்து அதனை மீட்க முடியாமல் வெறுங்கையோடு வீடு செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

மேலும் ஆய்வு பிரதேசத்தில் சீட்டாடும் போது அவ் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு அறிவித்தவுடன் அவர்களை பொலிஸாரால் சுற்றி வளைக்கப்படும் போது பதறி அடித்து விட்டு கம்பி மற்றும் மதில்களை பாய்ந்து பொலிஸாரிடம் இருந்து தப்பி செல்வதையும், அதன் போது தான் கொண்டு வந்த பணங்கள், சீட்டுக்கள் மற்றும் வாகனங்களை விட்டு செல்வதையும் தப்பி ஓடும் போது சில நபர்கள் பொலிசாரிடம் சிக்குவார்கள். ஓடும் போது கம்பிகளில் சிக்குண்டு கிழிப்பட்டு இரத்தம் வழிய வழிய உயிரைக் கையில் பிடித்து ஓடுவதைக் அவதானிக்க கூடியதாக இருந்தது.

சீட்டாடுவதனால் குடும்பத்தில் மட்டுமல்ல. அது சமூகத்திலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என கலந்துரையாடலின் ஊடாக அறிய முடிந்தது. அவை பினவருமாறு:-

- 100க்கு மேற்பட்ட குடும்பங்களில் இப்பழக்கம் இருப்பதனால் ஊர் அபிவிருத்தி இதனால் பாதிக்கப்படுகின்றது. இதனால் பின்தங்கிய கிராமமாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

- சீட்டாட்டம் இடம் பெறுகின்ற வீடுகளில் அருகில் உள்ளவரகளுக்கு இது அவர்களின் அன்றாட கருமங்களை செய்வதற்கு தடையாக இருக்கின்றது. இதற்கு உதாரணம் வயது வந்த பெண்கள் நடமாட முடியாமல் இருக்கின்றது.


- வாகனங்களை அருகிலுள்ள வீடுகளில் அனுமதியின்றி நிறுத்தி வைப்பதனால் அதனை எடுத்து வேறு எங்கும் நிறுத்தி வைங்க என்று கூறும் போது அவர்களால் அக்குடும்பம் தாக்கப்படுகின்றது. இவ்வாறு கூறிய குடும்ப ஒன்றினுள் புகுந்து கணவனை கட்டி போட்டு மனைவியை கணவன் முன் பாலியலுக்கு உட்படுத்தியதோடு, அங்குள்ள பெறுமதியான பொருட்களை எடுத்து சென்ற சம்பவம் அவ் ஆய்வு பிரதேச மக்களை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளது. இச்சம்பவத்தின் பின்பு சீட்டாட்டம் தொடர்பான விடயங்களை மக்கள் கவனத்திற்கொள்ளாத நிலைக்கு இட்டுச்சென்றது.

- சீட்டாட வருகின்ற வாகனங்களை அருகிலுள்ள வீடுகளில், பாதைகளில் நிறுத்திவைப்பதனால் ஆய்வு பிரதேச மக்களுக்கு செல்வதற்கு தடையாக காணப்படுகின்றதோடு, ஊர் பெரியவர்கள், கிராம நிலதாரி மற்றும் பிரதேச அபிவிருத்தியாளர் போன்றோர் அதனை தட்டி கேட்க போகும் போது அவர்களுக்கு அடித்தல் மற்றும் அவர்களின் பேச்சுக்கு மதிப்புக்கொடுக்காமை.

- சீட்டாடுவதற்கு பணம் இல்லாதவர்கள் குடும்பத்தை காப்பதற்காக வேலை சென்று மாலையில் வரும் பெண்களில் நகைகளை கத்தியை காட்டி அறுத்து செல்லல்.
- ஆளில்லாத வீடுகளில் புகுந்து களவு எடுத்தல்
- அடிக்கடி பொலிஸாரால் சீட்டாடும் இடம் வளைக்கப்படுவதனால் மக்கள் தொந்தரவுக்குள்ளாகின்றனர்.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் அக்கிராம மக்கள் பெரிதும் பாதிப்புள்ளாகி வருகின்றனர் என்பதை கலந்துரையாடலின் மூலம் அறிய முடிந்தது.

✓ ஆய்வு பிரதேசத்தில் எக் காரணத்திற்காக சீட்டாடுகின்றார்கள் என்பதை வரைபு 1 இல் அவதானிக்கலாம்.




அங்குள்ள குடும்பங்களில் எக்காரணத்திற்காக சீட்டாடுகின்றார்கள் என்பதை வினவிய போது பின்வரும் வரைபு (1) பெறுபேறாக கிடைத்தது. 20% வீதமானவர்கள் பொழுது போக்கிற்காக விளையாடுகின்றார்கள். இதனை இளைஞர்கள், சுயதொழில் செய்பவர்கள்கள் பொழுது போக்கிக்காக வியைாடுவதாகவும் 40% வீதமானவர்கள் தமது தொழிலாக இதனை மேற்க்கொள்கின்றனர் எனவும் 30% வீதமானவர் தனது உழைப்புக்கு மேலதிகமாக பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் அதவாது ஒரு மாதம் உழைக்கும் சம்பளத்தை வெற்றி பெற்றால் 1 நாளில் பெற்றுக்கொள்ளலாம் என்ற பேராசை பிடித்த எண்ணத்திற்காகவும் மற்றும் 10 வீதத்தினர் திருவிழாக்களில் மரண வீடுகளில் கொண்டாட்டங்களில் போதும் வியைாடுவதாகவும் அறிய முடிந்தது.

- ✓ அங்குள்ள குடும்பங்களில் அங்குள்ள மக்களிடம் அதிகமாக விளையாடும் சீட்டாட்டம் வகை என்ன என்பது கேட்கும் போது பின்வரும் வரைபு (2) கிடைக்கப்பெற்றது.

| சீட்டாட்டம் வகை அழைக்கப்படும் பெயர் | ஆடுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பஸ்வாசி | 0-10 |
| ஜோடு பார்த்தல் | 10-30 |
| மூனு சீட்டு | 30- 35 |
| பூறு அடித்தல் | 35-80 |
| 304 சீட்டு | 80-100 |

இதில் அம்மக்களால் சீட்டாடத்தின் வகை பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுவதை அறிய கூடியதாக இருந்தது. இதன் மூலம் 304 சீட்டுட்டுகளே 80 தொடக்கம் 100 இற்கு இடைபட்டோர் விளையாடுவதாக குறிப்பிட்டனர். இதில் ஆண்களை விட பெண்களே ஆர்வமுள்ளவர்கள் என்பதையும் அறிய முடிந்தது. பூறு அடித்தல் ஆண்கள் மட்டுமே ஆடக்கூடிய ஆட்டமாக காணப்படுகின்றது.

**சீட்டாத்தில் பெண்களின் பங்குபற்றல்**

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் 20க்கு உட்பட்ட குடும்பங்களில் ஆண்கள் மட்டுமன்றி அவர்களுடன் இணைந்து பெண்களும் ஆண்களுக்கு தமது பங்களிப்பினை வழங்குகின்றனர். சில குடும்பங்களில் பெண்கள் தம் கணவர் பிள்ளைகளுடன் பொழுது போக்கிற்காக விளையாடக் கூடியதாகவும், சில குடும்பங்களில் பெண்கள் ஆண்களுக்கு உதவியாக இருப்பர். ஒரு ஆணின் வீட்டில் சீட்டாட்டம் ஆடுகின்ற போது அவ்வீட்டில் விளையாடுவதற்கு வெற்றி பெற்றவரகளிடம் இருந்து குறிப்பிட்ட தொகையொன்று அவ்வீட்டு உரிமையாளருக்கு கொடுக்க வேண்டும். இது கட்டாயமான ஒன்று அல்ல. அத்தொகையினை அவ்வீட்டு பெண்களே பெற்றுக்கொள்கின்றனர் என்று கலந்துரையாடலின் போது அறிய முடிந்தது.

மேற்குறிப்பிட்ட அதாவது சீட்டாடும் ஆண்கள் தமது வாகனங்கள், நகைகள் என்பவற்றை ஈட்டு வைப்பதாக குறிப்பிடப்பட்டது. ஈட்டு எடுக்கும் தொழிலை செய்யக்கூடியவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். பெண்களுக்கு பணம் எங்கே இருந்து வருகின்றது என்ற வினாவை தொடுக்கும் போது தமது நகைகளை வங்கியில் வைத்து அதற்குரிய பணத்தை பெற்றுக் கொள்கின்றனர் அத்தோடு ஈட்டு வைத்த பொருட்களை மீட்கும் போது அதற்கான வட்டியையும் பெற்றுக்கொள்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஈட்டு வைத்த பொருளை மீட்க வராத பட்சத்தில் அதனை வேறு நபருக்கு கொடுத்த தொகையை விட மேலதிகமாக விற்று பணத்தை பெற்றுக்கொள்கின்றனர்.

சில பெண்கள் ஆண்களுக்கு சமமாக அமர்ந்து சீட்டாட்டத்தில் விளையாடுவதையும் அக்கிராமத்தில் காணக்கூடியதாக இருந்தது. அவ்வகையான பெண்கள் ஊர் மக்களால் ஒதுக்கிவைக்கபட்டுள்ளன என்பதையும் அறியக் கூடியதாக இருந்தது.

**பிள்ளைகளின் மனநிலை**


பெற்றோர்கள் இருவரும், குடும்பத்தில் யாராவது ஒருவர் சீட்டாடும் பழக்கத்தை உடையவராக இருப்பதனால் பிள்ளைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். பெற்றோர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் அக்குடும்பத்தின் நிம்மதியை தொலைப்பதோடு பிள்ளைகளின் வாழக்கையில் அது தாக்கத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. பெற்றோர்களின் அன்பில் பிள்ளைகள் வாழ ஆசைப்படுவார்கள். சீட்டாடும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் பாடசாலை செல்லும் போது ஏனைய மாணவர்களால் பகிடிவதைக்குள்ளாக்கப்படல். பெற்றோர்களின் சண்டையை பார்த்து அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அன்பு, அரவணைப்பு இன்றி ஏக்கத்துக்குள்ளாகின்றனர். சில பிள்ளைகள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது. பெற்ரோர்கள் சண்டையிட்டுக்கொள்வதாகவும், தன்னை கவனிக்காமல் இருப்பதாகவும் தந்தை மது அருந்திவிட்டு வந்து அடிப்பதாகவும், அம்மா வேலைக்கு செல்வதால் நானே எனது வேலைகளை செய்து கொள்வதாகவும் இதனால் அப்பிள்ளைகள் யாருடனும் சேராமல் இருப்பதாகலும் ஊர்வாசிகளினூடாக அறிய முடிந்தது. இவ்வாறு 30 க்கு மேற்பட்ட குடும்பங்களில் 20 க்கு மேற்பட்ட பிள்ளைகள் பெற்றோர்களிடம் காணப்படுகின்ற சீட்டாட்ட போதையால் பெற்றோர்கள் இருந்தும் இல்லாதது போல் வாழ்ந்து கொண்டிருப்பதைய இவ்வாய்வின் ஊடாக அவதானிக்க முடிந்தது.

நேர்காணலின் போது (நேர்காணல் 3) கணவன் அழித்த சொத்துக்களை மீட்க பிள்ளைகளை உறவினரிடம் விட்டு வெளிநாடு செல்கின்றனர். இக்கிராமத்தில் 80க்கு மேற்பட்ட பெண்கள் குடும்ப சுமையை தீர்ப்பதற்காக வெளிநாட்டு வேலைக்கு சென்றுள்ளனர். இதில் 50 பெண்கள் சீட்டு ஆட்டத்தால் இழந்த சொத்துக்களை மீட்க சென்றுள்ளனர். இதனால் அக்குடும்ப பிள்ளைகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதை இவ்வாய்வினூடாக அறிய முடிந்தது. அதாவது உறவினர்களால் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறு பெண் பிள்ளைகள் சித்தப்பா, மாமா மற்றும் அண்ணா போன்ற சொந்த உறவினர்களால் கருத்தறித்துள்ளனர். பெண்பிள்ளைகள் பெற்றோர்களின் பாதுகாப்பு இன்மையால் திருமணமான ஆண்களின் ஆசைகளுக்கு அடிமைபட்டு அவர்களுடன் ஓடி போயுள்ளனர். பெண் பிள்ளைகளை தனது ஆசை தீரும் வரை வைத்துவிட்டு அவர்களை காயப்படுத்தி வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். ஆண் பிள்ளைகள் பெற்றோர் அரவணைப்பு இன்மையால் முரட்டு தனமாக வளர்தல், மது போதைக்கு அடிமையாதல் இவ்வாறு 60 வீதமான ஆண் பிள்ளைகள் மது, சிகரட் மற்றும் புகையிலை பீடி போன்ற பழக்கத்தை பழகியுள்ளதை அறிய முடிந்தது. இவ்வாறு விட்டு சென்றதால், அப்பிள்ளைகள் அம்மாவை கேட்கும் போது உறவினர்களால் துன்புறுத்தப்படுதல், பெற்றோர் பற்றிய எதிரான கருத்துக்களை பிஞ்சு மனதில் பதியவைத்தல் இதனால் தாய் தனது பிள்ளையிடம் திரும்பி வரும் போது 10க்கு மேற்பட்ட பிள்ளைகள் அத்தாயின் மீது வெறுப்பு காட்டுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

பெற்றோருக்கிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள், விவாகரத்து, தற்கொலை போன்ற விடயங்களால் பிள்ளைகள் தமது கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்கின்றனர். வீட்டில் நிம்மதியாக தூங்க முடியாமல் பாட்சாலையில் தூங்குகின்றார்கள். வளர்ந்த பிள்ளைகள் அப்பா பட்ட கடனால் சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்க முடியாமை, பெற்றோர்களின் சண்டையால் பிள்ளைகள் தாக்கப்படுகின்றனர். இவ்வாறு 50 க்கு மேற்பட்ட பிள்ளைகளின் கல்வி நிலை கேள்விக்குறியாகியுள்ளமை ஆய்வினுடாக அறிய முடிந்தது.

எங்கு பார்த்தாலும் பல காரணங்களினால் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளின் வாழ்க்கை பாதிப்படைவதை காணக் கூடியதாக உள்ளது. இக்கிராமத்தில் சீட்டு ஆட்டத்தால் குடும்பங்கள் அவர்களின் பிளளைகளின் வாழத்கை என்பன சிதையுற்றுள்ளமை இதனால் கிராம முன்னேற்றம், குடும்ப பிரச்சிகைகள், இளைஞர் ஆர்வமின்மை, பின்தங்கிய கல்வி நிலை, வாழ்க்கை முன்னேற்றம் அடையாமை போன்ற பல பிரச்சினைகள் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

- ✓ பின்வரும் வரையு 3 மேற்குறிப்பிட்ட விடயங்களை நியாயப்படுத்துவதாக அமைகின்றது.




சீட்டாட்டம் சில குடும்பங்களை விவாகாரத்து என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதன் மறுவிளைவு பிரிந்தவர்கள் இன்னொரு துணையை நாடி சென்றுள்ளதால் இறுதியில் பிள்ளைகள் அனாதையாய் சிறுவர் இல்லங்களில் அல்லது ஆண் இருந்தால் சிறுவயதில் வேலைக்கு அமர்த்தப்படல் மற்றும் பெண்ணாய் இருந்தால் வீட்டு வேலைக்கு அமரத்தப்படல். சில பெண் பிள்ளைகள் சிறு வயதிலே தனக்கான துணையை தெரிவு செய்து கொள்ளுகின்ற நிலையும் காணப்படுகின்றது என கலந்துரையாடலின் ஊடாக அறிய முடிந்தது. இதில் 50 வீதமான குடும்பங்களில் விவாகரத்து மேற்க்கொள்ளப்பட்டதாக அடையாளம் காண முடிந்தன.

பெற்றோர்களின் சண்டையை பார்த்து பிள்ளைகள் வி\ம் குடித்தல். 5 பெண் மற்றும் 2 ஆண் பிள்ளைகள் பெற்றோர் தொடர்ந்து மேற்க் கொள்ளும் சண்டையால் வி\ம் குடித்துள்ளமை அயல்வாசிகளினூடாக அறிய முடிந்தது. அத்தோடு தந்தையின் சீட்டு ஆடும் பழக்கத்தை 20 க்கு மேற்பட்ட குடும்பத்திலுள்ள 18 வயதுக்கு கூடிய ஆண் பிள்ளைகள் பழக்கத்தை தானும் பழகிக்கொண்டு குடும்பத்திலுள்ள சொத்துக்களை தந்தையுடன் இணைந்து அழிக்கும் பழக்கத்தை பழகியிருப்பதை ஆய்வின் மூலம் கண்டயறிய முடிந்தது. (நேர்காணல் 9)

இவ்வாறானதொரு மனநிலைக்கு பிள்ளைகள் ஆளாகபடுவதை கலந்துரையாடலின் போது அறிய முடிந்தது.

**7. ஆய்வின் முடிவுரை**

தேத்தாப்பளை கிராமத்தில் குடும்பங்களுக்கிடையில் சீட்டாட்டத்தால் அதிகமான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இங்குள்ள குடும்பங்களில் அதிகமாக சீட்டாட்டத்தில் ஆண்களே விளையாடுவதையும் இதில் குறிப்பிட்டளவான பெண்களின் பங்களிப்பும் உள்ளது இவ் ஆய்வின் மூலமாக அறியமுடிகின்றது. மேலும் இச்சீட்டாட்டம் காரணமாக உடலியல், உளவியல், சமூகவியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆளாவதையும் அக்கிராம மக்கள் கலந்துரையாடல்களின் போது வெளிப்படுத்தியிருந்தனர்.அதாவது விவாகரத்து, இளவயது திருமணம், பாலியல் தொல்லை, இரண்டாவது திருமணம், போதைபொருள் பாவனை, கல்வி நிலை பாதிப்படைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதாக கண்டறியப்பட்டது. பிள்ளைகளின் மனநிலை பெற்றோருகிடையே ஏற்படுகின்ற முரண்பாடு, விட்டு செல்லல் இதனால் உறவினர்களின் சரியான பராமரிப்பு இன்மையால் ஏற்படுகின்ற பாலியல் மற்றும் உளவியல் பிரச்சினைகளுக்கு பிள்ளைகள் முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதை இவ்வாய்வினுடாக முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ஆய்வு இடமானது தேத்தாப்பளையில் சீட்டு ஆடுவதனால் அதிகமான தாக்கங்களையும், எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளதே ஆய்வின் முடிவாக முன்வைக்கப்படுகின்றன.

தேத்தாப்பளை கிராமத்தில் கள ஆய்வின் மூலம் சீட்டு ஆடுவதனால் குடும்பங்களில் அதிகமான பிரச்சினைகள் இருப்பதை அறிவதோடு, அது சமுதாயத்தில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி இருப்பதை அறிய முடிந்தது. இவ்வகைளில் இவ் சீட்டாட்டத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்கு பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- அரசாங்கம் இது தொடர்பான தகுந்த நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- கிராம அபிவிருத்தி மற்றும் சுய தொழில் வாயப்புக்களை வழங்குதல்
- கல்வியின் அவசியத்தை வலியுறுத்தல்
- தேத்தாப்பளை கிராமத்தில் அதிகமான கல்விமான்களை உருவாக்குதல்
- புத்திஜீவிகள் மூலம் சீட்டாட்டத்தால் ஏற்படும் உளவியல் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு, மாநாடுகள் போன்றவற்றை நடாத்தல்
- பெண்களிடத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.
- இளைஞர்களுக்காக வழிகாட்டல் கருத்தரங்குகளை ஏற்படுத்துதல்
- குடும்பத்தினுள் ஆன்மீக தன்மையை ஏற்படுத்துதல்
- கிராம உத்தியோகத்தவர்கள், மதத்தலைவர்கள், கல்விமானகள், இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கண்டிப்புக்களும், தண்டனைகளும் வழங்கல்
- விளையாட்டு தளத்தை ஏற்படுத்தும் குடும்பங்களுக்கு அறிவுரை வழங்கல் மற்றும் அதற்கான தக்க நடவடிக்கைகளை எடுத்தல்
- பொலிஸாருக்கு அறிவுறுத்தல்
- கிராம மக்களின் ஆதரவுடன் கட்டுபடுத்த பொலிஸாருக்கு உதவி செய்தல்
- எதிர்க்கும் குடும்பங்களுக்கு கிராம மக்கள் ஒத்துழைப்பு வழங்குதல்

**8. Ackwoaledgement**

இவ்வாய்வினை மிகவும் சரியாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிப்பதற்கு தரவுகளையும் தகவல்களையும் வழங்கிய தேத்தாப்பளை கிராம கல்விமான்கள், கிராம உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

**9. உசாத்துணைகள்**


1. சூதாடுவதில் என்ன தவறு?. Retrived from https://wol.jw.org/ta/wol/d/
2. சீட்டாட்டம். Retrived from https://www.sramakrishnan.com
3. அளவு சரியாக இருந்தால் அட்டகாசமான சரக்கு. Retrived from https://pusuriyan.wordpress.com
4. Charles.C and Thomas .M.M, (1983). The gambling scane:why people gamble Retrived from https://scholor.google.com
5. Suurvali. H. Hodgins.D.C and Cunningham.J.A, (2010). Motivators for resolving or seeking help for gamgling problems: A review of the empirical. Retrived from https://scholor.google.com
6. Pentland. J and Drosten. D, (1996) . Finacicial counseling and problem gambling counseling : exploration of service model. Retrived from https://scholor.google.com
7. Dowling. D, (2014). The impact of gamgling problems on families. Retrived from http://scholor.google.com
8. Winters. k, Bengston.m and Door. K, (1975). Prevalence and risk factors of problem gambling among college students. Retrived from https://scholor.google.com
9. நேர்காணலுக்குட்படுத்தியோர்
    1. ரோஸ்நிலாந்தி, ஆர் ஆசிரியர், தேத்தாப்பளை(2019.08.30)
    2. ஜீட், எஸ். கிராம உத்தியோகத்தர், தேத்தாப்பளை (2019.08.30)
    3. மனோகரன், எஸ் , ஆலயத்தலைவர், தேத்தாப்பளை (2019.09.05)
    4. பிரியங்கா, ய. அ, ஊர்வாசி, தேத்தாப்பளை(2019.09.06)
    5. மேரி அக்னஸ், பீ, ஊர்வாசி, தேத்தாப்பளை (2019.09.06)
    6. விஜித்தா, க, ஊர்வாசி, தேத்தாப்பளை (2019.09.06)
    7. அஜித் லசந்த குமார், ய, ஊர்வாசி, தேத்தாப்பளை(2019.09.06)
    8. சுதா, பி, ஊர்வாசி, தேத்தாப்பளை(2019.09.06)
    9. ரஸ்மிலா,பீ, ஊர்வாசி, தேத்தாப்பளை(2019.09.06)
    10. செபஸ்தியான்,க, ஊர்வாசி, தேத்தாப்பளை(2019.09.07)